

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (6.1.2025) முகாம் அலுவலகத்தில், அகில இந்திய ரயில்வே தொழிலாளர் சம்மேளனத்தின் (AIRF) தலைவரும், தெற்கு ரயில்வே மஸ்தூர் யூனியன் பொதுச் செயலாளருமான என். கண்ணையா சந்தித்துப் பேசினார். உடன் தென்னக இரயில்வே மஸ்தூர் யூனியன் தலைவர் சி.ஏ. ராஜா ஸ்ரீதர் உள்ளார்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், திருச்சிராப்பள்ளி மாவட்டம் மணப்பாறை சிப்காட் வளாகத்தில் நடைபெறவுள்ள பாரத சாரண, சாரணியர் இயக்கத்தின் வைரவிழா மற்றும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா சிறப்புப் பெருந்திரளணிக்கான பாடலை நேற்று முன்தினம் (6.1,2025) வெளியிட்டு, இணையதளத்தை தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக்கல்வித் துறை இயக்குநர் முனைவர் ச. கண்ணப்பன், தனியார் பள்ளிகள் இயக்கக இயக்குநர் முனைவர் மு. பழனிச்சாமி, தொடக்கப்பள்ளி இயக்குநர் முனைவர் பூ.ஆ.நரேஷ் மற்றும் பள்ளிக் கல்வித் துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.



தலைமைச் செயலகத்தில், நேற்று முன்தினம் (06.01.2025) முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை சிறப்பாக கொண்டாடும் வகையில் அமைக்கப்பட்ட "தொலைநோக்குச் சிந்தனையாளர் கலைஞர்" என்ற குழுவின் கூட்டம் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சரும். குழுவின் தலைவருமான இ.பெரியசாமி தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சமூக நலன் மகளிர் உரிமைத் துறை அமைச்சரும், குழுவின் இணைத் தலைவருமான பி.கீதா ஜீவன், சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை முதன்மைச் செயலாளரும், குழுவின் உறுப்பினர் – செயலருமான முனைவர் ப.செந்தில்குமார் மற்றும் குழு உறுப்பினர்கள், அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# களத்தில் வைத்த கோரிக்கைகளை, அதிகாரத்திற்கு வந்ததும் நிறைவேற்றிய கட்சி, இந்தியாவிலேயே தி.மு.க. மட்டும்தான்!

## சென்னையில் நடைபெறும் 48–வது புத்தகக் காட்சியில் ஊடகவியலாளர் ஜீவசகாப்தன்– வாசகர்கள் கலந்துரையாடல் நிகழ்ச்சியில் பேச்சு!

**05.01.2025 அன்று கலந்துகொண்டு, வாசகர்களுடன் கலந்துரையாடினார்.**

390 முத்தமிழறிஞர் பதிப்பகம்



சென்னையில் நடைபெறும் 48-வது புத்தகக் காட்சியில் திராவிட இயக்க ஆளுமை ஒருவருடன் தினந்தோறும் வாசகர்கள் பங்கேற்கும் கலந்துரையாடல் நிகழ்ச்சியை முத்தமிழறிஞர் பதிப்பகம் நடத்தி வருகிறது.

இதில் 05.01.2025 அன்று ஊடகவியலாளர் ஜீவசகாப்தன் கலந்துகொண்டு, வாசகர்களுடன் கலந்துரையாடினார்.

அப்போது அவர் பேசியதாவது:

இல்லாதவர்களுக்கு, இயலாதவர்களுக்கு உழைப்பதற்காகவே கட்சி, ஆட்சி, பதவி என்று கருதியவர் முத்தமிழறிஞர் கலைஞர். அத்தகைய கலைஞரின் பெயரால் ஒரு பதிப்பகம் உருவாக்கப்பட்டுள்ளது.

**பெரும் வாய்ப்பு**

பெரியார் எதையெல்லாம் மாற்ற வேண்டுமென்று நினைத்தாரோ, அதையெல்லாம் சட்டத்தின் வாயிலாக மாற்றிக் காட்டிய பெரும் வாய்ப்பு கலைஞருக்கு கிடைத்தது.

**நிறைவேற்றப்பட்ட தீர்மானம்**

அண்ணாவுக்கு இயற்கை அந்த வாய்ப்பை நீண்ட காலம் வழங்கவில்லை. முதல் சுயமரியாதை மாநாட்டின்போது கலைஞருக்கு வயது 5. பரம்பரைச் சொத்தில் பெண்களுக்கு உரிமை வழங்க வேண்டுமென்று, அந்த மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு, 1989-இல் சட்டம் கொண்டு வந்தவர் கலைஞர்.

குடிசைகள் இல்லாத சமூகம் படைக்க வேண்டும், பிச்சைக்காரர்களுக்கும் உரிமைகள் கிடைக்க வேண்டுமென்று, கலைஞர் திரைப்படங்களில் எழுதிய வசனங்கள்தான், அவர் ஆட்சிக்கு வந்தபிறகு குடிசை மாற்று வாரியமாகவும், பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு மையங்களாகவும் உருவாகின.

**கலைஞர் தனித்து நிற்கிறார்**

இப்படி கலைஞர் தீட்டிய திட்டங்கள் அனைத்துமே நீதிக்கட்சி காலத்தில் இருந்து திராவிட இயக்கம் பேசியவை, எழுதியவை, அதற்காகப் போராடியவை. அவற்றையெல்லாம் நிறைவேற்றுகிற கொள்கை உறுதியும், ஆழமான பார்வையும் கலைஞருக்கு இருந்தது. அந்த இடத்தில்தான் மற்ற முதலமைச்சர்களிடத்தில் இருந்து கலைஞர் தனித்து நிற்கிறார்.

**நிறைவேற்றிய கட்சி**

களத்தில் நிற்கும்போது வைத்த கோரிக்கைகளை, அதிகாரத்திற்கு வந்தபோது அதிகம் நிறைவேற்றிய கட்சி இந்தியாவிலேயே திராவிட முன்னேற்றக் கழகம் மட்டும்தான். எனவே, திராவிடம் என்றால், ஒரு கட்சி என்றோ, ஆட்சி, அதிகாரத்தை கைப்பற்றுவது என்றோ சுருக்கிப் பார்க்க முடியாது. திராவிடத்திற்கு கடந்த கால வரலாறு இருந்தது, நிகழ்காலம் இருக்கிறது, வருங்காலமும் உள்ளது.

இவ்வாறு அவர் பேசினார்.

